ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2254/35 – 2021 නොවැම්බර් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා – 2021.11.18
2254/35 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. : 1/2010.

**1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டம்**

*1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும் இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தின் 20அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.*

**நிமல் சிறிபால டி சில்வா (பா. உ.),**
தொழில் அமைச்சர்,

கொழும்பு,
2021, நவெம்பர் 15.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தீங்கு விளைவிக்கக்கூடிய தான்புரி தொழில் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. ஆளொருவர்

(i) வீட்டு வேலையாளொருவராக ;

(ii) விலங்கறு மனையொன்றை அல்லது இறைச்சியை வெட்டுதல், துப்பரவு செய்தல், நறுக்குதலை உட்படுத்து கின்றதும் ;

(iii) விலங்குகளை பராமரித்தல், அவற்றுக்கு உணவளித்தல் மற்றும் பயிற்சியளித்தலை உட்படுத்துகின்றதும் ;

(iv) இறால் பண்ணைகள் அல்லது இழுது மீன் பண்ணைகள் உட்பட நீரியல் பொருட்களை பண்படுத்தல் சம்பந்தமானதும் ;

(v) பீடை கொல்லிகள், களைகொல்லிகள் அல்லது பூஞ்சை கொல்லிகள் உட்பட கமநல இரசாயனப் பொருட்களின் உற்பத்தி, களஞ்சியப்படுத்துகை, பொதியிடல், விற்பனை செய்தல், கையாளுதல் அல்லது இடம் பெயர்த்தலை உட்படுத் துகின்றதும் ;

(vi) மீன், இறைச்சி, மரக்கறிகள் அல்லது பழங்கள் உட்பட உணவுப்பொருட்களை பதனிடுவதற்கான இரசாயனப் பொருட்களின் பயன்பாடு மற்றும் பழங்களை கனிய வைப்பதற்கான இரசாயனப் பொருட்களின் பயன்பாட்டை உட்படுத்துகின்றதும் ;

(vii) மதுசார அல்லது கள் உற்பத்தி, அவற்றை இடம் பெயர்த்தல், கையாளுதல் அல்லது விற்பனை செய்தலை உட்படுத்துகின்றதும் ;

(viii) புகையிலை பயிரிடல், அவற்றை அறுவடை செய்தல், பொதியிடல், கையாளுதல் அல்லது இடம் பெயர்த்தல் என்பவற்றை உட்படுத்துகின்றதும் ;

(ix) புகையிலை உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, அவற்றை இடம் பெயர்த்தல், கையாளுதல் அல்லது விற்பனை செய்தலை உட்படுத்துகின்றதும் ;

(x) தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்களின் உற்பத்தி, அவற்றைக் கையாளுதல், இடம்பெயர்த்தல் அல்லது அகற்றுதலை உட்படுத்துகின்றதும் ;

(xi) கதிரியக்கப் பொருட்களின் பயன்பாடு, அவற்றைக் கையாளுதல், இடம் பெயர்த்தல் அல்லது அகற்றுதலை உட்படுத்துகின்றதும் ;

(xii) ஈயம், நாகம், ஆர்சனிக், பாதரசம், குரோமியம், நிக்கல், வெள்ளி, கட்மியம் அல்லது அத்தகைய எவையேனும் தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் அல்லது பதார்த்தங்களின் உற்பத்தி, அவற்றைக் கையாளுதல், இடம் பெயர்த்தல் அல்லது அகற்றுதலை உட்படுத்துகின்றதும் ;

(xiii) சுண்ணாம்பு, சிலிகேட், கல்நார் அல்லது சீமெந்து உற்பத்தி அல்லது அவற்றைக் கையாளுதலை உட்படுத்துகின்றதும் ;

(xiv) அழகு நிலையங்களில் இரசாயனப் பொருட்கள் அல்லது ஒப்பனைச் சாதனங்களின் பயன்பாட்டை உட்படுத் துகின்றதும் ;

(xv) (ஸ்பா) ஆரோக்கிய குளியல் சிகிச்சை நிலையம் ஒன்றில் உள்ளதும் ;

(xvi) உளவியல்சார் நலன் அல்லது தொடரினை அணுக்கத்துக்கு தீங்கு விளைவிப்பதாகவுள்ள கணினி அல்லது இலத்திரனியல் சாதனங்கள் தொடர்பானதும் ;

(xvii) களரி ஒன்றில், மதுபான சாலையொன்றில் அல்லது சீட்டாட்ட நிலையமொன்றில் அல்லது அது தொடர்பானதும் ;

(xviii) வெடிமருந்துகள் அல்லது சுடுபடைக்கலன்களின் உற்பத்தி, அவற்றை இடம் பெயர்த்தல், கையாளுதல் அல்லது விற்பனையைக் கையாளுகின்றதும் ;

(xix) தொழிற்பாட்டில் உள்ள இயந்திரத் தொகுதி மற்றும் கூரிய முனைகளுடனான இயந்திரத் தொகுதியின் பயன்பாடு, அவற்றை துப்பரவு செய்தல், தொழிற்படுத்தல் அல்லது பழுதுபார்த்தலை உட்படுத்துகின்றதும் ;

(xx) அரைக்கும் ஆலையொன்றில் அல்லது அது தொடர்பானதும் ;

(xxi) வர்த்தக மீன்பிடி அல்லது ஆழமான நீர்ப்பரப்பு மீன்பிடித் தொழிற்பாடுகளில் உள்ளதும் ;

(xxii) நீச்சல் தடாகங்களில் அல்லது அவற்றின் பேணுகையுடன் தொடர்பானதும் ;

(xxiii) துறைமுகமொன்று, கப்பற்றுறை, புகுவழி, முற்றம், இறங்கு மேடை அல்லது கழிமுகத்தினுள் பாரத்தை ஏற்றிச் செல்லுதலையும் உடலூறை விளைவிக்கின்ற ஏதேனும் சாதனத்தை பயன்படுத்துதலை உட்படுத்துகின்றதும் ;

(xxiv) தொழிற்படுகின்ற படகுகளை உட்படுத்துகின்றதும் ;

(xxv) பயணிகள் போக்குவரத்து உட்படுத்துகின்றதும் ;

(xxvi) சுழியோடுதலை உட்படுத்துகின்றதும் ;

(xxvii) ஈர நிலங்களினூடாக நடந்து செல்லல் அல்லது அவற்றில் பூக்கள் பறித்தலை உட்படுத்துகின்றதும் ;

(xxviii) நிலத்தின் கீழ் அல்லது குகைகளில் பொறுப்பேற்கப்பட்டதும் ;

(xxix) நிர்மாண அமைவிடத்தின் அலுவலக வளவுகளினுள் இலகுவான அலுவலகப் பணி தவிர்ந்த நிர்மாண அமைவிடங்களில் உள்ளதும் அல்லது அவை தொடர்பானதும் ;

(xxx) உலோகங்களை உருக்குதலை உட்படுத்துகின்றதும் ;

(xxxi) கண்ணாடி உற்பத்திக்காக மணலை அரித்தெடுத்தலை உட்படுத்துகின்றதும் ;

(xxxii) கண்ணாடியை உருக்குதல் வெட்டுதலை உட்படுத்துகின்றதும் ;

(xxxiii) உயர் மின்னழுத்த மின்சார வயர் சம்பந்தப்பட்டதும் ;

(xxxiv) (அ) 1.5 மீற்றருக்கு மேற்பட்ட உயரம் கொண்டதும் (ஒவ்வொரு பக்கத்திலும்) காப்பு வழிமுறைகள் ஏற்பாடு செய்யப்படாததும் ; அல்லது

(ஆ) காப்பு வழிமுறைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது 3.0 மீற்றருக்கு மேற்பட்ட உயரம் கொண்டதுமான (ஒவ்வொரு பக்கத்திலும்),

ஏதேனும் அமைவிடத்தில் உள்ளதும் ;

(xxxv) குப்பைகூளங்கள் அல்லது கழிவுப்பொருளின் சேகரிப்பை, அகற்றுதலை அல்லது பெருக்குதலை அல்லது கால்வாய்களை அல்லது வடிகால்களை துப்பரவு செய்தலை உட்படுத்துகின்றதும் ;

(xxxvi) மருத்துவ ஆய்வு கூடங்களில் அல்லது அவை தொடர்பானதும் அல்லது மருத்துவ சாதனத்தின் பயன்பாட்டைத் தேவைப்படுத்துகின்றதும் ;

(xxxvii) மருத்துவ அல்லது உயிரியல் கழிவு தொடர்பானதும் ;

(xxxviii) தோல் பதனிடுதலுடன் சம்பந்தப்பட்டதும் ;

(xxxix) காடொன்றில் அல்லது ஏதேனும் வேறு வேலைத்தளத்தில் மரத்தைச் சேகரித்தலை, வெட்டுதலை, தறித்தலை அல்லது பிளத்தலை உட்படுத்துகின்றதும் ;

(xl) மரங்கள் ஏறுதல் அல்லது மரங்களை வெட்டி வீழ்த்துதலை உட்படுத்துகின்றதும் ;

(xli) (அ) ஆண்களின் விடயத்தில் எடையில் 8 கிலோகிராமிற்கு மேற்பட்டதும் பெண்களின் விடயத்தில் எடையில் 5 கிலோ கிராமிற்கு மேற்பட்டதுமான ஏதேனும் சுமையை 50 மீற்றர்களை விஞ்சிய தூரத்திற்கும் ஆகக்குறைந்தது 3 நிமிட இடைவேளை ஒன்றில்லாமல் 10 நிமிட காலப்பகுதியை விஞ்சுகின்ற தொடர்ச்சியான காலப்பகுதிகளுக்கும் நாளொன்றில் 4 மணித்தியாலங்களை விஞ்சுகின்ற கூட்டுமொத்த காலப்பகுதியொன்றிற்கும் (இடைவேளைகள் உட்பட) உயர்த்துதலை, கொண்டு செல்லுதலை அல்லது நகர்த்துதலை உட்படுத்துகின்றதும் ; அல்லது

(ஆ) ஆண்களின் விடயத்தில் எடையில் 8 கிலோ கிராமிற்கு மேற்பட்டதும் பெண்களின் விடயத்தில் எடையில் 5 கிலோ கிராமிற்கு மேற்பட்டதுமான ஏதேனும் சுமையை ஆகக்குறைந்தது 3 நிமிட இடைவேளை ஒன்றில்லாமல் 10 நிமிட காலப்பகுதியை விஞ்சுகின்ற தொடர்ச்சியான காலப்பகுதிகளுக்கும் நாளொன்றில் 2 மணித்தியாலங்களை விஞ்சுகின்ற கூட்டுமொத்த காலப்பகுதியொன்றிற்கும் (இடைவேளைகள் உட்பட) வாகனமொன்றுக்கு ஏற்றுதலை அல்லது வாகனத்திலிருந்து தரையிறக்குதலை உட்படுத்துகின்றதும் ;

ஆயின், ஆண்களின் விடயத்தில் சுமையானது எடையில் 10 கிலோகிராம்களை விஞ்சுதலாகாது என்பதுடன் பெண்களின் விடயத்தில் சுமையானது எடையில் 7 கிலோகிராம்களை விஞ்சுதலுமாகாது.

(xlii) பித்தளைப் பொருட்கள் அல்லது வார்ப்பு சிலிக்களின் உற்பத்தியை உட்படுத்துகின்றதும் ;

(xliii) பட்டாசுகள் அல்லது வேறு ஏதேனும் வெடிமருந்து உற்பத்தி அல்லது அவற்றின் விற்பனையை உட்படுத்துகின்றதும் ;

(xliv) தீப்பற்றியெரியக்கூடிய பதார்த்தம் அல்லது தீ பயன்படுத்தப்படுவதை உட்படுத்துகின்ற செயற்பாடுகளாகவுள்ளதும் ;

(xlv) ஏதேனும் ஹோட்டலில், உணவகத்தில், சாப்பாட்டுக் கடையில் அல்லது மதுபானச் சாலையில் மதுசாரம் பரிமாறுவதை உட்படுத்துகின்றதும் ;

(xlvi) ஏரி, குளம், ஓடை, ஆறு, நீர்த்தேக்கம், கப்பற்றுறை மேடை, கால்வாய் அல்லது கடற்கரையொன்றில் அல்லது அது தொடர்பானதும் ;

(xlvii) கல் அகழ்தல், கல்லுடைக்கும் இயந்திரம் ஒன்றிற்கு அல்லது அதிலிருந்து கற்களை கொண்டுசெல்லல் அல்லது கல் உடைத்தல் மற்றும் கல் நொறுக்குதலில் உள்ளதும் ;

(xlviii) துறைமுகமொன்றில் அல்லது அதனைச் சுற்றி மணல் அகழ்வதனை உட்படுத்துகின்றதும் ;

(xlix) வாகனமொன்றிற்கு அல்லது கலத்திற்கு அல்லது அதிலிருந்து மணல் ஏற்றுவதனை அல்லது தரையிறக்குவதனை உட்படுத்துகின்றதும் ;

(l) சுண்ணாம்புக்கல் சூளையொன்றில் உள்ளதும் ;

(li) சுரங்கம் ஒன்றில் அல்லது கற்சுரங்கமொன்றில் உள்ளதும் ;

(lii) வார்ப்புக் கூடமொன்றில் அல்லது உலோகம் சாணை தீட்டும் இடமொன்றில் உள்ளதும் ;

(liii) செங்கற்கள் அல்லது கூரை ஓடு உற்பத்திக்கான சூளையொன்றில் உள்ளதும் ;

(liv) வழிகாட்டிகளாக உல்லாசப் பயணிகளுடன் உடன்செல்வதை உட்படுத்துகின்றதும் ;

(lv) கட்டிடங்களுக்கு தீந்தை அடித்தலை உட்படுத்துகின்றதும் ;

(lvi) புடவை உற்பத்தியில் பின்வரும் தொழிற்பாடுகளை உட்படுத்துகின்றதும் ;

(அ) புரிநூல் தயாரித்தல் ;
(ஆ) சிக்கெடுத்தல் ;
(இ) நூல் நூற்றல் ;
(ஈ) நெய்தல் ;
(உ) மெழுகு உருக்குதல் ;
(ஊ) சாயம் கலத்தல் ;
(எ) வார்ப்புக்களில் இடுதல் ; அத்துடன்
(ஏ) நீர் பிரித்தெடுக்கும் இயந்திரங்களில் வேலை செய்தல் ;

(lvii) தைத்த ஆடைகளின் உற்பத்தி தொடர்பான பின்வரும் எவையேனும் செயற்பாடுகளை உட்படுத்துகின்றதும் ;

(அ) அடுக்குதல் ;

(ஆ) நேர்க் கூர் விளிம்பு அல்லது பட்டிக்கூர் விளிம்பு வெட்டுதல் ; அத்துடன்

(இ) மெருகிடுதல், அழுத்துதல் மற்றும் இஸ்திரியிடல் ;

(lviii) இறப்பர்பால் இரசாயன பரிகரிப்பின் மூலம் இறப்பர் விரிப்புகளின் உற்பத்தியை உட்படுத்துகின்றதும் ;

(lix) ஆட்கள், ஆதனம் அல்லது விலங்குகளுக்கான பாதுகாப்பு வழங்குவதனை உட்படுத்துகின்றதும் ;

(lx) கண்ணாடியை அல்லது கண்ணாடிப் பொருட்களை பொதியிடல், அவற்றைக் கையாளுதல், ஏற்றுதல் அல்லது தரையிறக்குதலை உட்படுத்துகின்றதும் ;

(lxi) ஓடு வெட்டுதலை உட்படுத்துகின்றதும் ;

(lxii) கருவிகளைப் பயன்படுத்தல், ஏதேனும் மரத்தினாலான பொருள் அல்லது தளபாடத்தை மெருகூட்டுதல் அல்லது அவற்றுக்கு மர பேணிக்காப்பான்களைத் தெளித்தலை உட்படுத்துகின்ற தச்சுத்தொழிலாகவுள்ளதும் ;

(lxiii) வீதி நிர்மாணம் அல்லது காணி மீட்டெடுப்பு நோக்கத்துக்காக மட்டமாக்குதலை, சரிவாக்குதலை அல்லது தாரிடுதலை உட்படுத்துகின்றதும் ;

(lxiv) உப்பு அறுவடை செய்தல், பொதியிடல், ஏற்றுதல் அல்லது இடம்பெயர்த்துதலை உட்படுத்துகின்றதும் ;

(lxv) வர்த்தக தாபனங்களில் சமைத்தல் அல்லது வெதுப்புதலை உட்படுத்துகின்றதும் ;

(lxvi) உள்நாட்டு அல்லது கடலோர நீர்ப்பரப்புகளில் தொழிற்படுகின்ற கலன் ஒன்றின் மீது உள்ளதும் ;

(lxvii) ஆட்டவட்டரங்கு அல்லது களியாட்ட அரங்கேற்றங்கள் அல்லது வேறு எவையேனும் அபாயகரமான அரங்கேற்றங்களை உட்படுத்துகின்றதும் ;

(lxviii) திரைப்படம், தொலைக்காட்சி நாடகம் அல்லது வேறு ஏதேனும் அச்சிடப்பட்ட, அனுப்பப்பட்ட அல்லது வெளியிடப்பட்ட விடயம் ஒன்று தொடர்பாக சுகாதாரம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்துக்கு தீங்கு விளைவிக்கக்கூடியதும் ;

(lxix) கனரக வாகனங்களின் டயர்களை மாற்றுவதை உட்படுத்துகின்றதும் ;

(lxx) பிரேத அறை மலர்ச்சாலை அல்லது மயானமொன்றில் உள்ளதும் ; அல்லது

(lxxi) அத்தகைய இளம் ஆளின் சுகாதாரம் அல்லது பாதுகாப்புக்கு தீங்கு விளைவிக்கக்கூடியதாகவுள்ளதுமான ;

ஏதேனும் வகையினதான வேலையில் பதினெட்டு வயதுக்குக் குறைந்த எவரேனும் ஒருவரை தொழிலுக்கமர்த்துதலாகாது.

3. இவ்வொழுங்கு விதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையான தேவைப்படுத்தினாலேயொழிய

"சாலை" என்பது, இசைவுக்கூடம் ஒன்றையும் உள்ளடக்கும் ;

"சீட்டாட்ட நிலையம்" என்பது, 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"களரி" என்பது, 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, களரிகளுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட ஒரு களரி எனப் பொருள்படும் ;

"வெடி மருந்துகள்" என்பது, 1956 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, வெடிமருந்துகள் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"காடு" என்பது (283 ஆம் அத்தியாயமான) காட்டுக் கட்டளைச் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருள்" என்பது -

(அ) ஏதேனும் பொருள், திரவமாக இருப்பினும் சரி, திண்மமாக இருப்பினும் சரி அல்லது வாயுவாக இருப்பினும் சரி, சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவது, வெளிவிடப்படுவது, அல்லது கொட்டப்படுவது 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தால் அல்லது அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளினால் தடைசெய்யப்பட்ட ஏதேனும் பொருள் எனப் பொருள்படும் ; அல்லது

(ஆ) எந்த எரிபொருளின் பாவனை 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தினால் அல்லது அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளினால் தடைசெய்யப்படுகின்றதோ அந்த ஏதேனும் எரிபொருள் எனப் பொருள்படும் ;

"பீடை கொல்லிகள்" என்பது, 1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பீடைகொல்லிகளைக் கட்டுப்படுத்தற் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"துறைமுகம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தினுள் குறித்துரைக்கப்பட்ட துறைமுகமொன்று எனப் பொருள்படும் ;

"கதிரியக்கப் பொருள்" என்பது, 2014 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை அணுசக்திச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"புகையிலை உற்பத்திப் பொருள்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"கலன்" என்பது, 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"இளம் ஆள்" என்பது 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. இவ்வொழுங்கு விதிகள், திறன்கள் அபிவிருத்தி நோக்கத்துக்காக ஏதேனும் அரசாங்க அல்லது அரச சார்பற்ற நிறுவனம் அல்லது தொழில்நுட்ப கல்லூரிக்கு இணைக்கப்பட்ட உள்ளுறைவாளர், பயிலுநர் அல்லது பயிற்சி பெறுநர் ஒருவராகவுள்ள இளம் ஆள் ஒருவருக்கு ஏற்புடையனவாதல் ஆகாது,

5. 2010 ஆம் ஆண்டு, ஓகத்து 20 ஆந் திகதிய 1667/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2010 ஆம் ஆண்டின் தீங்கு விளைவிக்கக்கூடிய வாழ்க்கைத் தொழில் ஒழுங்கு விதிகள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.

11 - 798

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.